[1987 நவம்பர் 10

விளையாட்டுப் போட்டிகளை மாநில அளவில் ஆண்டுதோறும் அரசாங்கமே நடத்துவதாக இருந்தால் சிறப்பாக இருக்கும். அந்த வகையில் நடவடிக்கை எடுத்து,

'ஒளிபடைத்த கண்ணினாய் வா வா வா
உறுதிகொண்ட நெஞ்சினாய் வா வா வா'

என்ற பாரதியின் பாடலை செயல்படுத்தக்கூடிய வகையிலே ஒவ்வொருவரையும், போர்ப்படை தளபதியாக உருவாக்கக்கூடிய வகையிலே நடவடிக்கை எடுக்கும் முயற்சியில் அரசு ஈடுபடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, அதுகுறித்து பரிசீலிக்கப்படும்.

நசரத்பேட்டை அரசு உயர்நிலைப் பள்ளிக்கு கட்டிடம் கட்டுதல்

14—(* வினா எண் 12848) திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பூந்தமல்லி தொகுதி, நசரத்பேட்டை அரசு உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, இப்பள்ளிக்கு கட்டடம் கட்ட தேவையான நிலம் பெற நடவடிக்கை பள்ளிக் கல்வி இயக்குநரால் மேற்கொள்ளப் பட்டுள்ளது. தேவையான நிலம் கிடைத்த பின்னர் நிதிநிலைமைக்கேற்ப இப்பள்ளிக்குக் கட்டடம் கட்டிக் கொடுக்க பரிசீலிக்கப்படும்.

திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா: தலைவரவர்களே, இந்தப் பள்ளிக்குத் தேவையான 5 எக்கர் நிலம் பரிந்துரை செய்யப்பட்டு அரசுக்கு வந்திருக்கிறது. அதில் 2.5 ஏக்கர் அனாதீன புறம் போக்கு நிலம்; 2.5 ஏக்கர் குட்டை புறம்போக்கு நிலம். குட்டை புறம்போக்கு நிலத்தைக் கொடுக்க அரசு ஆணை கட்டுப்படுத்து கிறது என்று சொல்லப்படுகிறது. இந்த அரசு ஆணைக்கு விதிவிலக்கு அளித்து 5 எக்கர் நிலத்தையும் பெற்றுத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

1987 நவம்பர் 10]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, வருவாய்த் துறையுடன் கலந்து, இதுகுறித்து ஆய்வு செய்யப் படும்

திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா: தலைவரவர்களே, இந்த நிலத்தை 'லீசு' க்குக் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். அரசு நிலத்தை அரசுப் பள்ளிக்கு லீஸ் விடுவது முறைதானா? அதை 'டிரான்ஸ்ஃபர்' செய்து, விரைவாகக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, பொதுவாக ஏரி, குளம் ஆகியவற்றிற்குரிய நிலத்தை பிற பணிகளுக்கு ஒதுக்கக்கூடாது என்று தடை இருக்கிறது. ஆகையால் இதுபற்றி ஆராய்ந்துதான் முடிவு செய்ய வேண்டும். அரசு நிலத்தை அரசுத் துறைக்கு லீசுக்கு விடுவது என்று இல்லை. இப்படிப்பட்ட குறிப்பு அரசுக்கு வரவில்லை. அந்த நிலத்தை பிற பணிகளுக்குக் கொடுப்பதாக இருந்தால், இந்தப் பள்ளிக்கே அதனைக் கொடுக்க அரசு ஆணையிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ச. கோவிந்தசாமி : தலைவரவர்களே, நீண்ட நாட்களாக சொந்தக் கட்டடம் இல்லாத பள்ளிகளுக்கு கட்டடம் கட்டித்தர அரசு சிறப்புத் திட்டம் தீட்டி தகுந்த ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, தற்போது உயர்நிலைப் பள்ளிகள் என்று எடுத்துக்கொண்டால் 2520 பள்ளிகள் இருக்கின்றன. அவற்றில் சுமார் 800 பள்ளி களுக்கு மட்டும்தான் கட்டட வசதி இருக்கிறது; 1800 பள்ளி களுக்கு கட்டட வசதி இல்லை என்ற அளவுக்கு நிலைமை இருக்கிறது. இந்த 1300 பள்ளிகளுக்கும் கட்டட வசதி ஏற்படுத்தித்தர குறைந்தபட்சம் 250 கோடி ரூபாய் தேவை என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. நமக்கு இருக்கின்ற நிதிநிலைப் பிரச்சினையை இந்த அவை அறியும். இதற்கு ஒரு சிறப்புத் திட்டம் தீட்டி, கூடிய விரைவில் பள்ளிக் கட்டட நிதியைப் பெருக்கி, மத்திய அரசு நிதியைப் பெற்றும் தகுந்த நடவடிக்கை எடுக்க அரசு முடிவு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 15 முதல் 20 வரையில் மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளிற்கு இணங்க ஒத்திவைக்கப் பெறுகின்றன.

மின்விசைச் செக்கினால் தயாரிக்கப்படும் பொருட்கள்.

21—(*வினா எண். 3520) திரு. கா. சொர்ணலிங்கம்: மாண்புமிகு சத்துணவு, சமூக நலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கதர் கிராமத் தொழில் மின்விசைச் செக்கு உரிமையாளர்களால் தயாரிக்கப்படும் எண்ணெய் முதலான உற்பத்திப் பொருட்களை அரசு கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் விற்பனைக்கு ஏற்பாடு செய்யவும், விற்பனையை ஊக்குவிக்க மானியம் அளிக்கவும் திட்டம் ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: பேரவைத் தலைவர் அவர்களே, கதர் கிராமத் தொழில் மின்விசைச் செக்கு உரிமையாளர்களால் தயாரிக்கப்படும் எண்ணெய் முதலான பொருட்களை அரசு கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் விற்பனை செய்திட ஏற்கெனவே தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய மாவட்ட உதவி இயக்குநரின் மூலம் உரிய நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது. மானியம் அளிக்கும் திட்டம் இல்லை.

திரு. கா. சொர்ணலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விசைச் செக்குகளின் மூலம் தயாரிக்கப்படுகிற எண்ணெய்களை எல்லாம் சரியான முறையில் விற்பனை செய்ய முடியாத நிலைமையின் காரணமாக அந்த விசைச் செக்குகளை வைத்துக் கொண்டிருப்பவர்கள் அனைவரும் அதனை நடத்த முடியாமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப் பட்ட நிலைமையிலே அவற்றை கூட்டுறவுச் சங்கங்கள் இதுவரையில் எடுத்து விற்பனை செய்வதாகத் தெரியவில்லை. அதனை விரைவில் எடுத்து விற்பனை செய்வதற்கும் அந்த விசைச் செக்குகளை வைத்து இருப்பவர்கள் நஷ்டமடைந்து கொண்டிருப்பதால் அரசு மீண்டும் பரிசீலனை செய்து கடனாகவோ, மானியமாகவோ ஏதோ ஒரு வழியில் அவர்களுக்கு நிவாரணம் அளிக்கவும் முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS